ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2312/70 - 2022 දෙසැම්බර් මස 31 වැනි සෙනසුරාදා - 2022.12.31

*2312/70 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மதுவரி கட்டளைச்சட்டம்

*மதுவரி அறிவித்தல் இல. 07/ 2022*

### மதுபானங்கள் மீதான மதுவரித் தீர்வை

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவறான, மதுவரி கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (52 ஆம் அத்தியாயம்) மூலம் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான் இந்தக் கட்டளையின் மூலம், 2023, சனவரி 03 ஆம் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், பின்வரும் தீர்வை விகிதங்களை விதித்துரைக்கின்றேன்;

(1) இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட ஏதேனும், உரிமம் பெற்ற தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் விசேட சாராயம் தொடர்பாக, மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா ஐயாயிரம் (ரூபா 5,000.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(2) இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஏதேனும், உரிமம் பெற்ற தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் வெல்லப்பாகு (மொலாஸஸ்), பனை, தென்னை மற்றும் பதப்படுத்தப்பட்ட சாராயங்கள் தொடர்பாக, மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா ஐயாயிரத்து முந்நூற்றைம்பது (ரூபா 5,350.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(3) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட உள்நாட்டுத் தயாரிப்பாகிய “வெளிநாட்டு” ஸ்பிரீத்துக்கள் தொடர்பாக, மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா ஐயாயிரத்து ஐந்நூறு (ரூபா 5,500.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(4) இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட உரிமம் பெற்ற வடிசாலையில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும், ஒட்டுத்துண்டில் (லேபிள்) குறிப்பிடப்பட்டுள்ளபடி ஐந்து சதவீதம் (5%) முழுமையான செறிவிற்குக் குறைவான மோல்ட் மதுபானம் தொடர்பாக, மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா மூவாயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபது (ரூபா 3,960.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(5) இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட உரிமம் பெற்ற வடிசாலையில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் ஒட்டுத்துண்டில் (லேபிள்) குறிப்பிடப்பட்டுள்ளபடி ஐந்து சதவீதத்திற்கு அதிகமான (5%) முழுமையான செறிவிற்குக் குறைவான மோல்ட் மதுபானம் தொடர்பாக, மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா நான்காயிரத்து நூற்றுஐம்பது (ரூபா 4,150.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(6) பனை மரத்தின் அல்லது பிற தாவரங்களின் இயற்கைப் பொருட்களைக் காய்ச்சி வடிகட்டுவதைத் தவிர மற்ற செயல்முறைகளால் இலங்கையில் தயாரிக்கப்படும் மதுபானங்கள் (கள் அல்லது தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் ஏதேனும் மதுபானம் தவிர) தொடர்பாக, மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா மூவாயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபது (ரூபா 3,960.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(7) இலங்கையில் காய்ச்சி வடித்தல் அல்லாத பிற செயல்முறைகளால் தயாரிக்கப்படும் மதுசாரத்தின் அளவு 18% இனை விஞ்சாதுள்ள உள்ளூர் தாவரப் பொருட்கள் அல்லது தாவர உற்பத்திப்பொருட்கள் அல்லது அருந்தக்கூடிய உள்ளூர் மிருகப் பால் ஆகியவற்றிலிருந்து மட்டுமே தயாரிக்கப்படும் மதுபானங்கள் தொடர்பாக, மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா ஆயிரத்து எண்பது (ரூபா 1,080.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(8) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 'மில்க் பஞ்ச்'' மதுபானம் தொடர்பாக, மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பது (ரூபா 2,750.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(9) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட, ஒட்டுத்துண்டில் (லேபிள்) குறிப்பிடப்பட்டுள்ளபடி முழுமையான செறிவு நான்கு சதவீதத்திற்கு (4%) மேற்படாத, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சைடர் மதுபானம் தொடர்பாக மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா மூவாயிரம் (ரூபா 3,000.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(10) மேலே (1) முதல் (9) வரை விதிக்கப்பட்டுள்ள தீர்வையானது, ஏற்றுமதி செய்யப்படும் மேற்கூறப்பட்ட மதுபானத்தின் எத்தகைய அளவு தொடர்பாகவும் அறவிடப்படவோ அல்லது மீளப்பெறப்படவோ கூடாது; மற்றும்

(11) இலங்கையிலுள்ள ஏதேனும் இராஜதந்திர தூதரகசேவையின் பயன்பாட்டிற்காக அத்தகைய வடிசாலையிலிருந்து வழங்கப்பட்ட ஏதேனும் அளவிலான மதுபானம் தொடர்பில், அத்தகைய அளவிலான மதுபானத்திற்கான கட்டணம், அத்தகைய இராஜதந்திர தூதரகசேவையின் வெளிநாட்டுக் கணக்கிலிருந்து செலுத்தப்பட்டால், மேலே (4) மற்றும் (5) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்வை விதிக்கப்படவோ அல்லது மீளப்பெறப்படவோ கூடாது.

2021, நவெம்பர் 12 ஆந் திகதிய 2253/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 11/2021 மற்றும் 2019, திசெம்பர் 03 ஆந் திகதிய 2152/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 09/2019 ஆகியவை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, திசெம்பர் 31.

EOG 01 - 0071

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.